# ரூஹா சுவாச காற்று

காற்று–14 மார்ச் 2024 சுவாசம்–01

ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-





# இதயம் திறந்து உங்களுடன்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துகளைத் தெரி வித்துக்கொள்கிறேன். நீங்கள் அனைவரும் சுகமாய் இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன். உங்களுக்காக நானும் ரூஹா ஜெபவீரர்களும் ஜெபித்து வருகிறோம்!

தேவனுடைய அளவற்ற கிருபையால் பிப்ரவரி 18ம் தேதி நமது ரூஹா ஊழியங்களின் 18வது ஆண்டு நிறைவு விழா, **St. Thomas Hr. Sec. School** பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. சென்னை பட்டணத்தின் மூத்த ஊழியர் **போதகர் ஆனந்த்** அவர்கள், எனது அருமை நண்பர் **போதகர் ப்ரேம்நாத் சாமுவேல், போதகர் விக்டர் ராஜாமணி** அவர்கள் கலந்து கொண்டு வாழ்தது செய்தி வழங்கி, கர்த்தருடைய நாமத்தில் ஆசீர்வதித்தார்கள். இத்தனை ஆண்டுகளாய் ரூஹா ஊழியத்தின் நேசித்து ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் தாங்கி வருகிற பங்காளர்கள், நலம் விரும்பிகள், ஜெபவீரர்கள், தன்னார்வ தொண்டர்கள் என அனைவருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைச் செலுத்துகிறேன்.

ஜனவரி மாதம் மஹாராஷ்டிரா மாநிலம் நவப்பூரில் நடைபெற்ற மூன்று நாட்கள் எழுப்புதல் பெருவிழாவில் அநேகர் அற்புத சுகத்தையும், கட்டுகளிலிருந்து விடுதலையையும் பெற்றுக்கொண்டனர். சரக்கு வாகனங்களிலும் ஆட்டோகளிலும் டிரக்கர்களிலும் கூட்டம் கூட்டமாக கர்த்தருடைய வார்த்தையை கேட்க சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வந்தனர். சுமார் 500 வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கென்று அர்பணித்தனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

### மார்ச் மாத ஊழியங்கள்

கர்த்தருக்கு சித்தமானால் இந்த மாதம் 15,16,17 ஆகிய தேதிகளில் கோவை மாவட்டம் CSI இம்மானுவேல் திருச்சபை நடத்துகிற லெந்து கால நற்செய்திக்கூட்டங்களில் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையை பிரசங்கிக்க அழைக்கப்பட்டிருக்கிறேன். இக்கூட்டமானது CSI இம்மானுவேல் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற இருக்கிறது. இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிற சபை குருவானவர்கள், செயலாளர்களுக்காகவும், ஊழியம் செய்யப்போகிற அடியேனுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். கோவை மாவட்டத்தில் உள்ள பங்காளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன். கர்த்தருடைய அற்புத சுகத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொள்ள வியாதியஸ்தர்களையும், பிசாசு கட்டுகளில் அகப்பட்டவர்களையும் அழைத்துக்கொண்டு வாருங்கள்.

### தேர்வு எழுதுகிற பிள்ளைகளுக்காக விசேஷ ஜெபம்

அன்பானவர்களே, தேர்வு எழுதும் மாவணர்களுக்காக விசேஷமான ஜெபத்தை நமது ரூஹா ஜெப மையத்தில் ஒவ்வொரு நாளும் ஏறெடுத்து வருகிறோம். தேவன் பிள்ளைகளை தம்முடைய விசேஷித்த ஞானத்தால் நிரப்புவார். அதிக மதிப்பெண்களை எடுத்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தப்போகிறார்கள். ஆகவே உங்கள் பிள்ளைகளின் பெயர்களையும் பாடத்தையும் நமது ரூஹா ஜெப உதவி எண்ணுக்கு அனுப்பி வைக்கும்போது, தேர்வு எழுதும் நேரத்தில் உங்களுடைய பிள்ளைகளின் பெயரைச் சொல்லி உபவாசத்துடன் ஜெபவீரர்கள் ஜெபிப்பார்கள். தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் 9884902777, 9884710777.

அதுமட்டுமல்லாது, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி தேர்வு எழுதுகிற பிள்ளைகளுக்கென்று “ஞானத்தின் ஆவியே” என்ற விசேஷ பாடலை மிகவும் சிறப்பாக ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு **alwinthomas** என்கிற **youtube** பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது வருகிறது. நீங்களும் இப்பாடலைக்கேட்டு பாடி, அறிக்கை செய்து தேவன் தரும் அளவில்லா ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

### தொலைக்காட்சி ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

அன்பானவர்களே, நமது ரூஹா தொலைக்காட்சி ஊழியத்தின் மூலமாக இலட்சகணக்கான ஜனங்கள் ஆசீர்வாதம் பெற்றுவருகிறதை தொலைப்பேசி, மின்னஞ்சல் மூலமாக தெரியப்படுத்தி வருகின்றனர். கடந்த நாட்களில் வெவ்வெறு இடங்களுக்கு கூட்டத்திற்காக சென்றபோது, அங்குள்ள மக்கள் என்னிடம் வந்து, “நாங்கள் ரூஹா டிவியைத் தொடர்ந்து பார்த்து வருகிறோம், எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக உள்ளது என்று கூறினார்கள். வேலூரில் படித்த ஒரு பட்டதாரி பெண் என்னிடம் ஓடி வந்து, “பாஸ்டர், நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தைச் சேர்ந்தவள். ஒருநாள் மிகுந்த மனக்கஷ்டத்தோடு இருந்த வேளையில் யூடியூபில் உங்களுடைய ரேமா வார்த்தையைக் கேட்க நேர்ந்தது. அதில் பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்ற வார்த்தை என்னோடு பேசினது. மிகுந்த ஆறுதலாக இருந்தது” என்ற கூறினார்கள். இதைக்கேட்டு நான் தேவனுக்கு நன்றி செலுத்தினேன். பல கோடி ஜனங்களுக்கு சுவிசேஷத்தை சுமந்து செல்லுகிற இந்த ரூஹா டிவியை உங்களுடைய விலையேறப்பெற்ற ஜெபத்தினாலும், உதாரத்துவ காணிக்கைகளினாலும் தாங்குங்கள்.

தினமும் அடியேனுக்காகவும், ரூஹா ஊழியங்களுக்காகவும் உங்கள் ஜெபத்தில் தாங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர் ஆல்வின் தாமஸ்**



# நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்

போதகர். ஆல்வின் தாமஸ்

"இயேசு கல்லறையில் இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" என்ற நற்செய்தியைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷமடைந்த சீஷர்களைப்போல, இந்த மார்ச் மாதத்திலே கர்த்தர் உங்களை சந்தோஷமாய் நடத்தப்போகிறார். விலையேறப்பெற்ற இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியை வாசித்து, உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இரவோடு இரவாக கெத்சமனே தோட்டத்தில், கள்ளனைக் கையும் களவுமாக பிடித்துக்கொண்டு போவதைப்போல, இயேசுகிறிஸ்து ரோம போர்ச்சேவகர்களால் பிடித்துக்கொண்டு போகப்பட்டார். ஆலோசனை சங்கத்தில் அவர் நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டார். அவருடைய உடல் உழுதுண்ட நிலம்போல காணப்படும்படியாக 39 அடிகள் அடிக்கப்பட்டார். சிலுவையை சுமந்துகொண்டு கொல்கதா மலைமேல் ஏறினார். குற்றவாளியைப்போல இரண்டு கள்ளர்கள் நடுவிலே அறையப்பட்டார். எத்தனையோ அவமானங்களையும், நிந்தனைகளையும் ஏற்றவராய், "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறி அழுது, இந்த உலகத்தின் ஒட்டுமொத்த பாவங்களையும் தன்மேல் சுமந்தவராய் தொங்கினார். கடைசியில் எல்லாம் முடிந்தது என்று சொல்லி, தன் ஜீவனை விட்டார். மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். கல்லறையோ, காவல் சேவகர்களோ, பிசாசோ, துரைத்தனங்களோ, அதிகாரங்களோ எதுவும் அவருடைய உயிர்த்தெழுதலை தடுத்து நிறுத்த முடியவில்லை. தான் ஜெயித்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்த பிசாசுக்கு சாவு மணி அடித்து, மரணத்தை ஜெயமாய் விழுங்கினார்.

**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 11:25)**

கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கையே இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்தான். இந்த உயிர்த்தெழுதல் மற்ற மார்க்கங்களிருந்து நம்மை வேறுபிரித்துக்காட்டுவதாயிருக்கிறது. இந்த உயிர்த்தெழுதல் என்ற ஒரு காரியம் நடைபெறாமலிருந்தால் நம்முடைய விசுவாசமே வீண். **"தேவன், அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்". (ரோமர் 10:9)** இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழும்பினார் என்றும், தேவன் அவரை எழுப்பினார் என்றும் விசுவாசிக்கிறவன் எவனோ அவன் இரட்சிப்பை பெற்றுக்கொள்கிறான்.

இயேசுகிறிஸ்துவுக்கு மிகவும் நெருக்கமாயிருந்த லாசரு மரித்துவிட்டான். இயேசு நான்கு நாட்கள் கழித்து, லாசருவை பார்க்க வந்தார். அப்பொழுது இயேசு லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளைப் பார்த்து, உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள், உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி, நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றார். உயிர்த்தெழுதல் என்பது ஒரு வினைச்சொல் **(Verb)** அல்ல. அது இயேசுவினுடைய ஆள்தத்துவத்தைக்குறிக்கும் பெயர்ச்சொல்லாக **(Noun)** இருக்கிறது. ஆகவே உயிர்த்தெழுதல் என்ற வார்த்தை இயேசுவைக்குறித்து சொல்லப்பட்டபடியால், அவர் செத்துபோன லாசருவை உயிரோடு எழுந்திருக்கப்பண்ணினார். மரித்து நான்கு நாட்களாயிற்றே, நாறுமே என்று சொன்னார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து கல்லைப் புரட்டிப்போடுங்கள் என்று சொல்லி, லாசருவே வெளியே வா என்று சத்தமிட்டு அழைத்து, அவனை உயிரோடு எழுப்பி ஜீவனைக்கொடுத்தார்.

இயேசு நாயீன் என்ற ஊருக்கு சென்றுக்கொண்டிருந்தார். அப்பொழுது மரித்துப்போன ஒரு வாலிபனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள். அந்த மகன் அவனுடைய விதவை தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். இயேசு நின்று, பாடையைத் தொட்டு, வாலிபனே, எழுந்திரு என்று சொன்னார். அப்பொழுது மரித்தவன் எழுந்திருந்து உட்கார்ந்தான். ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகளை தலித்தாகூமி என்று சொல்லி, உயிரோடு எழுப்பினார். உயிர்த்தெழுதலாகிய இயேசு கிறிஸ்து மரித்துப்போனவர்களை உயிரோடு எழுப்பினார்.



ஆனால் அவரே நமது பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் மரித்தார். மரித்த இயேசு கிறிஸ்துவை கர்த்தருடைய ஆவியானவர் எழுப்பினார். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்ததினால் நடைபெற்ற சில காரியங்களையும் ஆழமான சத்தியங்களையும் தியானிப்போம்.

## சத்தியத்தில் ஜெயம்

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில், முதலாவதாக சத்தியம் வெற்றி பெற்றது. சத்தியமுள்ளவராகிய இயேசுகிறிஸ்து, பொய்யும் பொய்க்கு பிதாவுமான பிசாசை ஜெயித்தார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றவர் தம்முடைய உயிர்த்தெழுதல் மூலமாக பொய்யை ஜெயித்தார்.

அவர் சத்தியமுள்ளவராய் வாழ்ந்தபடியால் அவருடைய உயிரை பிசாசு எடுக்கமுடியவில்லை. இயேசுகிறிஸ்து, தாமாகவே முன்வந்து, பிதாவே, என் ஆவியை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன் என்று பிதாவின் கையில் தன்னை ஒப்புக்கொடுத்தார். ஆகவே, நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக்கொடுக்கிறேன், அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக்கட்டளையை என் பிதாவி னிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார் (யோவான் 10:17,18)

அநியாயம் செய்கிறவர்கள், லஞ்சம் வாங்குகிறவர்கள், பொய் பேசுகிறவர்கள் எல்லாரும் உயர எழும்புவதுபோல தெரியும். ஆனால் சத்தியம் ஒன்றுதான் என்றென்றைக்கும் நிலைநிற்கும். உங்களுக்கு விரோதமாக எத்தனையோ பொய்சாட்சிகள் எழும்பினாலும் கர்த்தர் உங்களுக்காக எழும்பி வழக்காடுவார். சத்திய ஆவியானவர் உங்களுடனே கூட இருக்கிறபடியால் நீங்கள் பயப்பட வேண்டாம். இந்த உலகத்தில் யார் தான் உண்மையாக இருக்கிறார்? இதை நீ செய்வதினால் தவறில்லை என்று பிசாசு உங்கள் மனதில் தவறான எண்ணங்களைக் கொண்டு வருவான். அப்பொழுது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையுள்ள நாமத்தினால் நான் உண்மையாய் நடப்பேன் என்று நீங்கள் சொல்ல வேண்டும். இந்த பாவம் நிறைந்த உலகில் உண்மையாய் இருப்பது என்பது மிகவும் கடினம்தான். ஆனால் நீங்கள் உண்மையாய் இருப்பீர்களானால், பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

## பரிசுத்தத்தில் ஜெயம்

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, அவர் பாவம் அறியாதவராயிருந்தார் என்று வேதம் கூறுகிறது. ஆனால் பிதாவாகிய தேவன், பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார். இயேசுகிறிஸ்து பாவத்தின் முழு உருவமாய் சிலுவையில் தொங்கி, பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைத் தழுவினார். ஆனால் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து, நீங்களும் நானும் பாவம் செய்யாமல் பரிசுத்தமாய் வாழும்படிக்கு பாவத்தின்மேல் ஒரு ஜெயத்தைத்தந்து, பரிசுத்த வாழ்க்கையை நமக்கு அளித்தார்.

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியால், தான் சாவாமல் வாழ வேண்டும் என்று அசைப்பட்டு, பழத்தைத் தின்ற ஆதாமைப்போல இல்லாமல், கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, தன்னை சாவுக்கு ஒப்புக்கொடுத்து மரணத்தின் கனியைப் புசித்தார். ஆகவேதான், ஆதாமின் மூலமாக இந்த மனுகுலம் மரணத்தை தழுவியது, இயேசுகிறிஸ்துவின் மூலமாக உயிர்த்தெழுதல் நமக்கு உண்டாயிருக்கிறது.

தெற்கு அமெரிக்காவில் ஒரு பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் ஒரு பெரிய ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றின் அக்கரையில் ஒரு மிஷனெரி பெரிய மருத்துவமனையைக்கட்டி, அங்குள்ளவர்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்த்து, கிறிஸ்துவின் அன்பையும் அறிவித்தார். இக்கரையில் வசிக்கும் மக்களுக்கு அந்த மருத்துவமனையில் வைத்தியம் பார்க்கவேண்டும் என்ற ஆசை. ஆனால் அவர்களுடைய மூதாதையர் காலத்திலிருந்து இந்த ஆற்றை கடப்பவனை அந்த ஆற்றில் சுற்றிக்கொண்டிருக்கும் அசுத்த ஆவி கொன்றுவிடும் என்ற ஐதீகம் இருந்து வந்தது. அதனால் ஒருவனும் ஆற்றைக்கடப்பதில்லை. ஒரு நாள் வாலிபன் ஒருவன், நான் அக்கரைக்குச் செல்ல போகிறேன் என்று சொல்லி, ஆற்றில் இறங்கினான். கணுக்கால் அளவு உள்ளே சென்றான், பின்பு இடுப்பு அளவு சென்றான் ஒன்றும் ஆகவில்லை. பின்பு தண்ணீரில் மூழ்கினான். எல்லாரும் பதைபதைத்தார்கள். ஐயோ தண்ணீரில் மூழ்கிவிட்டானே என்று... சிறிது நேரத்தில் நீந்தி அக்கரைப்பட்டான். அக்கரையில் நின்று கையை அசைத்து, எனக்கு ஒன்றும் ஆகவில்லை, எல்லாரும் இங்கே வாருங்கள் என்று அழைத்தான். அனைவரும் வந்தார்கள். மருத்துவமனையில் வைத்தியம் பார்த்துக்கொண்டார்கள்.

அந்த வாலிபன் தன்னுடைய துணிச்சலின் நிமித்தம் தன்னுடைய மக்களுக்கு உதவி செய்தது போல, இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் இந்த முழு உலகத்திற்கு

ஜீவன் வந்தது. தன்னை விசுவாசிக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்து, நித்திய ஜீவனை உண்டுபண்ணினார்.

**அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக் கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 6:11-13)**

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, உங்களுடைய பாவங்களையெல்லாம் கல்வாரியில் சுமந்து தீர்த்துவிட்டபடி யினால், பரிசுத்த வாழ்க்கை வாழ உங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறார். வாழ்வது ஒரு வாழ்க்கைதான். இந்த பொன்னான வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தி, இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாய் இருங்கள். சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்தில் பாவத்திற்கு இடங்கொடுக்காமல், பரிசுத்தமாய் வாழ உங்களை அர்ப்பணியுங்கள்.

## விசுவாசத்தில் ஜெயம்

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் கிடைத்த மிக முக்கியமான மற்றொரு காரியம் விசுவாசம் ஜெயித்தது. விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால் விசுவாசத்தை நிலைத்தோங்கச் செய்தார். தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு மரித்தாலும் திரும்பவும் உயிரோடு எழுந்திருப்போம் என்கிற புதிய நம்பிக்கையை கொடுத்திருக்கிறார்.

**யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு, மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்திருந்தார்கள். யோப்பா பட்டணம், லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபித்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அப்போஸ்தலர் 9:36-40)**



இயேசு கிறிஸ்து உயிரோடு இருந்த காலத்தில் மரித்தவர்களை எழுப்பினது போல, அவரைப் பின்பற்றின அவருடைய சீடனாகிய பேதுரு, உயிர்த்தெழுதலின் வல்லமையால் உண்டான விசுவாசத்தில் தபீத்தாள் என்ற விதவையை உயிரோடு எழுப்பினார். இது மட்டுமல்லாது பவுலின் உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து வியாதியஸ்தர்கள்மேல் போட்டபோது, அவர்களுக்கு சுகம் கிடைத்தது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று நீங்கள் விசுவாசிக்கிறபடியால், நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் விசுவாசி என்று பெயர் பெற்றிருக்கிறீர்கள். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, எனக்கு பூரண சுகத்தைக்கொடுப்பார், அவருடைய தழும்புகளால் நான் சுகமானேன் என்று விசுவாச அறிக்கையிடுங்கள். தேவன் உங்களுக்கு விசுவாசத்தைக் கனப்படுத்தி, அற்புதங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

ஒரு வேளை கடந்த நாட்களில் நிகழ்ந்த சூழ்நிலையின் காரணமாக விசுவாசத்தில் பலவீனப்பட்டு காணப்படுகிறீர்களா? சோர்ந்து போகாதிருங்கள். தேவன், கர்த்தரை எழுப்பினார் உங்களையும் தம்முடைய வல்லமையினால் எழுப்புவார் என்ற

வார்த்தையின்படி, விசுவாசத்தில் நிற்பதற்கான பெலத்தைத் தந்து உங்களை எழுப்புவார். விசுவாசத்தினால் பரிசுத்தவான்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, உங்களுடைய விசுவாசத்தினால் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற கடன்பிரச்சனை, வியாதிகள், பெலவீனங்களை மேற்கொள்ள தேவன் உங்களுக்கு கிருபை செய்வார்.

## நித்தியத்தில் ஜெயம்

பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனின் சரீரமும் விதைக்கப்படுகிறது. மற்ற மதங்களில் சடலத்தை எரிக்கின்றனர் அல்லது புதைக்கின்றனர். நாம் எரிப்பதும் இல்லை, புதைப்பதும் இல்லை விதைக்கப்படுகிறோம். ஒரு விசுவாசி தான் விதைக்கிற விதைகள் நிச்சயமாக முளை த்தெழும்பும், பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு விதைக்கிறான். அதே போல் பூமியில் விதைக்கப்பட்ட பரிசுத்தவான்களின் சரீரத்திற்குள் கிறிஸ்துவின் ஜீவன் இருக்கிறபடியால் எக்காளச் சத்தம் ஒலிக்கும்போது அழிவில்லாதவர்களாய், மகிமையுள்ளவர்களாய், ஆவிக்குரிய சரீரத்தோடு எழுந்திருப்பார்கள். விதை முளைக்கத் தண்ணீரும், சூரிய ஒளியும் தேவை. நாம் உயிர்த்தெழ ஜீவனாகிய கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியின் வல்லமையும் தேவை.

**பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்," (வெளி.1:17,18)**

இயேசு மரணத்தையும், பாதாளத்தையும் ஜெயமாய் விழுங்கி உயிரோடு எழுந்தபடியால் நமக்கு உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வருகிறது. அழிவுள்ளதாய் விதைக்கப்படுகிற சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்தானம் பெற்ற நாம் கிறிஸ்துவை அணிந்து கொண்டோம் (கலாத்தியர் 3 : 27). ஒரு விதை நிலத்தில் புதைக்கும் போது, உருவம் மாறுகிறது. அழகு சிதைகிறது. மண்ணோடு மண்ணாகப் போகிறது. அந்த ஆனால் அந்த விதைக்குள்ளிருந்து அழகான செடி எழும்புகிறது. அதுபோல நாமும் உயிர்த்தெழும்போது மகிமையுள்ள சரீரத்தோடு, மறுரூமாக்கப் பட்டவர்களாய் தேவசாயலோடு எழுந்திருப்போம்.

**கிறிஸ்தவத்தின் மிக முக்கியமான எதிர்ப்பார்ப்பு நித்திய ஜீவன். இயேசுகிறிஸ்து எனும் ஒருவராலே நித்திய ஜீவன் அடைவார்கள் என்று வேதம் தெளிவாகக்கூறுகிறது. நித்திய ஜீவன் அளிப்பேன் என்பதே அவர் நமக்குத் தந்த வாக்குத்தத்தமாகும். (1 யோவான் 2:25)**

இந்த உலகத்தின் வாழ்க்கைக்கு பிறகு பரலோகம், நரகம் என்ற இரண்டு இடங்கள் உள்ளன. இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இயேசுவின் இரத்தம் என் பாவங்களைக் கழுவிற்று, அவர் மரித்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து, கறை திரை முதலானவைகள் நீங்கி, ஆவி ஆத்துமா சரீரத்தை பரிசுத்தமாய் காத்துக்கொண்டவன் நித்திய ஜீவனை அடையும்படி பரலோகத்திற்கும், பாவ வாழ்க்கை வாழ்ந்து, தங்கள் சுய இச்சையின்படி நடந்தவர்கள் நித்திய நரகத்திற்கும் செல்வார்கள்.

உயிர்த்தெழுதலில் முதல்வரான இயேசுகிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாட்கள் சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினபின்பு, ஒரு மேகம் அவரை உயர எடுத்துக்கொண்டது. அப்போது வெண்மையான வஸ்திரங்களைத் தரித்த இரண்டு பேர், எப்படி இயேசுவானவர் உங்கள் கண்ளுக்குமுன்பாக வானத்துக்கு எழுந்தருளிபோனாரோ, அப்படியே திரும்ப வருவார் என்றார்கள். ஆம், உலகத்தின் கடைசி முனை மட்டும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட பின்பு, இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் எக்காள சத்தம் தொனிக்க, ஆயிரமாயிரம் தூதர்களோடு இறங்கி வருவார். **அப்பொழுது முதலாவது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கிற நாம் மறுரூபமாக்கப்படுவோம். (1 தெசலோனிக்கேயர் 4:16)**

மரணத்தை ஜெயித்து உயிரோடு எழுந்த இயேசுகிறிஸ்து அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை உங்களுக்குக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார். உங்களுக்கும், கிறிஸ்துவுக்கும் சம்பந்தம் இருக்கிறதா? உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தவராக இருக்கிறாரா? உங்களுக்குள் சத்தியம் இருக்கிறதா? பரிசுத்தம் இருக்கிறதா? விசுவாசம் இருக்கிறதா? நித்தியத்தில் இயேசுவோடு வாழ்வேன் என்ற நம்பிக்கை இருக்கிறதா? உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். உங்கள் நித்தியத்தை எங்கே கழிக்கப்போகிறீர்கள்? மணவாளனாகிய கிறிஸ்துவோடு பரலோகத்திலா? அல்லது பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற அக்கினி அவியாமலும், புழு சாகாமலும் இருக்கிற நரகத்திலா? இந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை சுமந்து கொண்டு போய் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டி எழுப்புகிற ஒரு மனிதனை கர்த்தருடைய கண்கள் தேடிக் கொண்டிருக்கிறது. நீங்கள்தான் அந்த நபரா? தேவன்தாமே தம்முடைய அளவில்லாத உயிர்த்தெழுந்த வல்லமையை உங்கள்மேல் ஊற்றி உங்களை பயன்படுத்துவாராக!





ரூஹா ஊழியங்களின்

# 18வது ஆண்டு நிறைவு விழா

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நம்முடைய ரூஹா ஊழியங்களின் 18வது ஆண்டு நிறைவு விழா கடந்த பிப்ரவரி மாதம் 18ம் தேதி கொண்டாடப்பட்டது. இந்நாள் வரைரூஹா ஊழியங்களை வழிநடத்தி வந்த தேவனை ஸ்தோத்தரித்து, கர்த்தர் செய்த நன்மைகளுக்காக நன்றிபலிகளை ஏறெடுத்தோம். பள்ளி மைதானத்தில் வைத்து நடத்தப்பட்ட இக்கூட்டத்திற்கு வந்த ஜனங்களால் மைதானம் நிரம்பியது.












போதகர் **பென் சாமுவேல்** அவர்கள் சிறப்பான துதி ஆராதனையில் ஜனங்களை நடத்தினார்கள். பட்டணத்தின் மூத்த போதகர் **பாஸ்டர் ஆனந்த்** அவர்களும், கெத்சமனே பூரண சுவிசேஷ சபையின் தலைமைபோதகர் **பாஸ்டர் விக்டர் ராஜாமணி** அவர்களும் மற்றும் கல்வாரி கம்யூனிட்டி திருச்சபை யின் போதகர் **பாஸ்டர் பிரேம்நாத் சாமுவேல்** அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துச்செய்தி வழங்கி ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அதற்கு பின்பு நமது போதகர் சிறப்பான தேவசெய்தி அளித்து, வந்திருந்த ஒவ்வொருவரின் விடுதலைக்காகவும் சுகத்திற்காகவும் ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.









ரூஹா ஊழியங்களுக்காக ஜெபிக்கின்ற, காணிக்கைகளால் தாங்குகின்ற ஒவ்வொரு தேவ பிள்ளைகளையும், பங்காளர்களையும் **"கோடா கோடியாய் பெருகுவீர்களாக"** என்று மனதார வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். தொடர்ந்து ரூஹா ஊழியங்களை உங்களுடைய விலையேறப்பெற்ற ஜெபத்தினாலும், பேதாரவினாலும் தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

சாட்சி பகுதி

# நன்மை செய்தவரை துதியுங்கள்!

> ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வருகிறார். (யோபு 9:10) நமது ரூஹா ஊழியத்தின் மூலமாக நடைபெறுகிற கூட்டங்களில் தேவன் ஜனங்களுக்கு பூரண சுகத்தையும் விடுதலையையும் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும், உங்களுடைய விசுவாசத்தின் வளர்ச்சிக்காகவும் அற்புத சுகத்தைப் பெற்றுக்கொண்டவர்களின் சாட்சிகள்:

## 1 தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறியது



**என்னுடைய** பெயர் **பிரவீனா.** நான் கடந்த 2019 வருடத்திலே சென்னையில் நடைபெற்ற சுவிசேஷ கூட்டத்திலே போதகர் ஆல்வின் தாமஸ் அவர்களைச் சந்தித்து, என்னுடைய திருமண காரியங்களைக் குறித்தும், பொருளாதார நெருக்கடிகளைக் குறித்தும், கடன் பிரச்சனைகளைக் குறித்தும் சொன்னேன். அப்பொழுது போதகர், **“மகளே, என்னை கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பார் என்றும், சகலவித ஆசீர்வாதங்களையும் தருவார் என்றும், உன்னுடைய திருமண பத்திரிக்கையானது** Brown with Gold **நிறமுடையதாக இருக்கும் என்றும் கூறி ஜெபித்தார்கள்”.** போதகர் சொன்னதுபோலவே, கர்த்தர் என் கடன்பிரச்சனைகளை மாற்றி அவர் சொன்ன நிறத்திலே திருமண பத்திரிக்கையை அச்சிடவும், திருமணம் சிறப்பாக நடைபெறவும் கிருபை செய்தார். திருமணம் முடிந்து, நானும் என் கணவரும் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டோம். கர்த்தர் எங்களுக்கு அழகான பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார். போதகர் அவர்கள் கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகள் என்னுடைய வாழ்வில் அப்படியே நடந்ததைக் காண முடிந்தது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்

## 2 வேலையிலே ஆசீர்வாதத்தைக் காணச் செய்தார்



என்னுடைய பெயர் **அமுதா** (திருநெல்வேலி). என்னுடைய கணவர் செய்கின்ற வேலையில் பதவி உயர்வு கிடைக்க வேண்டும்மென்று அநேக நாட்களாக ஜெபித்துக்கொண்டிருந்தேன். ரூஹா தொலைக்காட்சியில் என்னுடைய விண்ணப்பத்தை கூறினேன். ஜெபவீரர்கள் பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு என்னுடைய கணவருக்கு பதவி உயர்வு கிடைக்கும்படி கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

## 3 பரிபூரண சுகத்தைக்கொடுத்தார்



**என்னுடைய** பெயர் **மஞ்சுளா** (இலங்கை). என்னுடைய சரீரத்திலே இடது புறத்திலே மிகவும் வேதனையோடு பிறரிடம் கூட சொல்ல முடியாத வலியை அனுபவித்துக் கொண்டிருந்தேன். மருந்துகளையும் எடுத்துக் கொண்டபோதும் சரியாகவில்லை. நவம்பர் 1 ஆம் தேதி நடைபெற்ற உபாவச ஜெபத்தை நேரலையிலே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது போதகர், ஒரு சகோதரிக்கு இடது புறத்திலே கருப்பாக இருக்கிறதைக் காண்கிறேன். கர்த்தர் சுகத்தைக்கொடுக்கிறார் என்று சொன்னார்கள். அன்றைய இரவே கர்த்தர் பரிபூரண சுகத்தைக்கொடுத்தார்.

## 4 கேன்சர் வியாதி சுகமானது



என்னுடைய பெயர் **புண்ணியக்கோட்டி** (சென்னை). என்னுடைய மனைவி கடந்த வருடத்திலே கர்ப்பப்பை கேன்சரினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல் லாது பிசாசின் கட்டினால் பாதிக்கப்பட்டிருந்தாள். இதனால் நாங்கள் மிகவும் வேதனையடைந்தோம். கடந்த வருடம் நவம்பர் 12ஆம் தேதி போதகர் ஜெபித்தபோது, பிசாசின் கட்டிலிருந்து பரிபூரண சுகத்தைக் பெற்றாள். பிறகு நாங்கள் ஸ்கேன் எடுப்பதற்காக சென்றிருந்தபோது உங்களுக்கு கேன்சர் இல்லை என்ற ரிப்போர்ட் வந்தது. என் மனைவி வாழ்க்கையில் தேவன் மாபெரும் அற்புதத்தைச் செய்தார். கர்த்தருக்கே கோடான கோடி நன்றிகளை செலுத்துகிறேன்!

## 5 திருமண தடை நீங்கியது:



என்னுடைய பெயர் **விஜி** (ஐய்யப்பந்தாங்கல், சென்னை). என்னுடைய திருமண காரியத்தில் பல தடைகள் இருந்தது. கடந்த மே மாதத்திலே போதகரை சந்தித்து, திருமணத்தடை நீங்கும்படியாக ஜெபித்தேன். அடுத்த மாதத்தில் உனக்கு திருமண காரியங்கள் ஒழுங்கு செய்யப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைத்து ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு ஜீன் மாதத்திலே, ஏற்ற துணையைக் கொண்டு வந்து நிச்சயதார்த்தம் நடைபெறும்படியாக கிருபை செய்தார். கர்த்தர் என்னுடைய வாழ்க்கையிலே தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிய தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

## 6 வேலை கிடைக்கும்படி செய்தார்



என்னுடைய பெயர் **ஸ்வீட்லின்** (ராமாபுரம், சென்னை). 2019ல் 2வது குழந்தை பிரவசத்திற்காக ஊருக்கு சென்றிருந்தேன். அப்போது கொரோனா வைரஸின் நிமித்தமாக நானும் என் கணவரும் வேலையை இழந்தோம். இந்த காரியத்தின் நிமித்தமாக என்னுடைய கணவர் மனஅழுத்திற்கு ஆளாகி, Fix பாதிப்பினால் பாதிக்கப்பட்டார். அப்போது Zoomல் நடந்துக் கொண்டிருந்த ஜெபத்தில் கலந்துக் கொண்டு ஜெபக் குறிப்பை போதகரிடத்திலே தெரிவித்தோம். போதகர், "*தலைமுறை சாபங்கள் முறிக்கப்பட்டுப் போகும்படியாகவும், இதோ புதிய காரியத்தை செய்கிறேன்*" என்றும் கூறி எங்களுக்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு சென்னை யிலிருந்து வேலை வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி அழைப்பு வந்தது. அந்த Interviewவில் கலந்துக் கொண்டேன். வேலை கிடைத்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

### தேவன் தரும் அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

### இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதாவர்!!

வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா? கடன் தொல்லையா? குடும்பத்தில் சமாதானம் இல் லையா? அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இன்றும் உங்களுக்கு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார். உங்களுடைய ஜெப விண்ணப்பங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:
**044 61328777, 9884901777**
(WHATSAPP)

மின்னஞ்சல் முகவரி:
**prayer.ruah@gmail.com**

# திருமணத்திற்கு முன் செய்ய வேண்டியது என்ன?



Ps. Cherie Mitchelle

அன்பான நண்பர்களே!!! மீண்டும் உங்க எல்லாரையும் இந்த வாலிபர் பகுதி மூலமா சந்திக்கிறது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. வாலிபராக இருப்பது எப்போதுமே சந்தோசம்தான்.. வயதானவர்களும் விரும்புறது தாங்களும் இளமையாக இருக்கனும்னுதான். இளமைலதான் பெலன் அதிகம் இருக்கும், நெனச்சத சாதிக்க முடியும், உழைக்க முடியும், சம்பாதிக்க முடியும், பின்வரும் சந்ததிகளுக்கு சேர்த்து வைக்கவும் முடியும். முதுமைல எந்த வித கஷ்டமும் படாம நிம்மதியாக ஓய்வெடுக்கும்னா அதற்கு ஒரு மனிதன் தன்னுடைய இளமையில அதற்கான வேலைகளையும் கடமைகளையும் செய்து முடிக்க வேண்டும். இளமையில் செய்கிற நற்கிரியைகளுக்கு முதிர் வயதிலே அதனுடைய பலனை அனுபவிக்கிறது போல, அவன் செய்கிற தவறுகளுக்கும் முதுமையில் அனுபவிக்க வேண்டும். வாழ்க்கை fulla கஷ்டப்பட கூடாதுனா அதற்கு வாலிப பருவத்திலேயே கவனமாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாலிப பருவத்தின் முக்கிய அங்கமான திருமண வாழக்கை குறித்து நாம பார்க்க போறோம். திருமணத்திற்கு முன் நாம் கடைபிடிக்கும் காரியங்கள் திருமணத்திற்கு பின்பும் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதிலே எந்த சந்தேகமேயில்லை. சில பேர் திருமணத்திற்கு ஆயத்தமாக இருப்பாங்க ஆனா திருமணத்திற்கு முன் எப்படியெல்லாம் ஆயத்தமாக இருக்கனும்னு தெரியாம இருப்பாங்க.

ஏதோ வீட்ல சொல்லிட்டாங்க அதுனாலதான் திருமணத்திற்கு சம்மதிச்சனு இருக்க வேண்டாம். ஏனோதானோ என்று திருமணம் செய்யாமல் அல்லது கூட படிச்சவங்களுக்கு திருமணம் ஆகிடுச்சு, உறவினர்களில் அநேகருக்கு ஆகிவிட்டது என்று வற்புறுத்தலினாலும் செய்யக்கூடாது. திருமணத்தில் தவறு நடந்துச்சுனா அது சில நேரத்தில் வாழ்க்கை முழுவதும் சீர்ப்படாமலேயே போய்விடும். எனவே, எந்த வித பிழைகளும், எதிர்கால சங்கடங்களுமன்றி திருமணத்திற்கு முன்னே காரியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவைகள் என்னவெல்லாம்னு பாக்கலாம் வாங்க

## 1 நல்ல வாழ்க்கை துணையை எதிர்ப்பாருங்கள்

எல்லாமே நல்லதாகதான் நம்முடைய பரம பிதா நமக்கு கொடுக்கிறார். **சங்கீதம் 85:12 கர்த்தர் நன்மையானதை தருவார்** என்ற வசனத்தின்படி கர்த்தர் நமக்கு நல்ல ஈவுகளையே கொடுப்பவர். அப்படி இருக்கும்போது வாழ்க்கை துணை என்கிற முக்கிய பகுதில கர்த்தர் எப்படி ஏதோ ஒன்றை தருபவர் அல்ல. உங்களுடைய எதிர்பார்ப்பு, "அவர் தருகிறது நல்லது என்பதாக இருக்கட்டும்." உங்களுடைய மனவிருப்பதின் படியும், அவருடைய அநாதி தீர்மானத்தின் படியேயும் கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கும் துணையை அளிப்பார். எனக்கு சரியான நபர் கிடைப்பாரா என்ற சந்தேகமோ பயமோ உங்களுக்கு வேண்டாம். கர்த்தர் உங்களுக்கு சிறந்ததைத் தருவார். உங்களுக்கு எது bestனு உங்களுக்கு சில நேரத்தில தெரியாமக்கூட இருக்கலாம் ஆனால் நிச்சயமாய் அது கர்த்தருக்கு தெரியும்.




"ஒரு கடைக்காரர் வியாபாரம் பண்ணிட்டு இருக்காரு தேங்காய் வெச்சுக்கோங்க, அன்னைக்கு கணக்குப்படி அவர் 10 தேங்காய்களை விற்று தீர்க்க வேண்டும். 9 விற்று விட்டது ஆனால் ஒன்னு மட்டும் விக்கலனா அந்த கடைக்காரர் என்ன பண்ணுவார் எப்படியாவது இந்த ஒரு தேங்காயை யார்கிட்டயாவது விற்று தீர்க்க வேண்டும் என்ற நிர்பந்தத்தோடு எதையாவது சொல்லி விற்பார்" நம்முடைய ஆண்டவர் விலைபோகாததை உங்களுக்கு எப்படியாவது தள்ளி விட வேண்டும் என நினைப்பவர் அல்ல. உங்களுக்கென்று ஏற்கெனவே பிரித்து வைக்கப்பட்டதை உங்களுக்கு அவர் அளிப்பார்.

## 2 இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளுங்கள்

இரட்சிப்பின் வஸ்திரம் நம்ம கிறிஸ்தவ வாழ்கைக்கு ரொம்ப முக்கியம். அத நம்ம இழந்து விட கூடாது. **எபிரெயர் 13:4 விவாகம் யாவருக்கும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.** இந்த வசனத்துல சொன்ன மாறி நம்முடைய வஸ்திரம் தீட்டு படமா நாம பாத்துகணும். இந்த உலகத்துல நம்ம ஆண்டவர்தான் மனிதர்கள படைச்சு அவங்களுக்குள்ள ஆசைகளை வைத்தார். நம்முடைய இருதயத்தின் வாஞ்சைகளை அவர் அறிந்திருக்கிறார். நாம் அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு இருக்கோம். அவர் நமக்கு தந்த இரட்சிப்பின் வஸ்திரம் காத்து கொள்ளணும். ஆண்டவருடைய சித்தம் படி நம்ம திருமணம் பரிசுத்தமாய் இருக்கணும்.


KEEP YOUR DRESS ON

அனுதினமும் நம்முடைய வாழ்விலே உண்டாகும் போராட்டங்கள், சவால்கள் ஒவ்வொன்றிலும் நாம் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவைப் போல மாறும்படிக்கு, நாம் இலவசமாக பெற்றுக் கொண்ட புதிய வஸ்திரமாகிய இரட்சிப்பின் உடையை, அதாவது தெய்வீக சுபாவத்தை (திவ்விய சுபாவம்) நாம் அணிந்தவர்களாக இருக்க வேண்டும். திருமணத்திற்கு முன்பாக உங்ககளை பரிசுத்தமும் கற்புமாக காத்து உங்கள் வாழ்க்கை துணைக்கு அதை விலையேறப்பெற்ற ஈவாக கொடுங்கள்.

## 3 உங்களுடன் ஆவிக்குரிய அளவில் இணைந்து இருக்கும் நபரை எதிர்நோக்குங்கள்

LOOK FOR THE PERSON WHO IS SPIRITUALLY COMPATIBLE WITH YOU)

**2 கொரி 6:14 அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக: நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது?** ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? எந்த காரணத்திற்காகவும் அந்நிய நுகத்தில மட்டும் பிணைக்கப்படக்கூடாது. நம்மோடு இணையப்போகும் நபர் கட்டாயமாக ஆவிக்குரிய நபராக இருக்க வேண்டும். மேலும் ஆவிக்குரிய முதிர்ச்சி உள்ளவராக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளையாக இருக்கும் நீங்கள் தேவ ஆவியை பெற்ற நபரோடே இணைய வேண்டும், இல்லனா உங்களால குடும்பமாக தேவனை ஆராதிக்க முடியாது. தேவனின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாது. ஏனென்றால் நாம் பயபக்தியுள்ள தேவ சந்ததியை பெற தான் திருமணத்திற்கென்று தேவன் நம்மை ஆயுதப்படுத்துகிறார். நம்மோடு இணையப் போகும் வாழ்க்கை துணை வேத வசனத்திலும், அபிஷேகத்திலும், உண்மையிலும் வேரூன்றவராக இருக்க வேண்டும் என்பதே தேவனின் சுத்தமாகும்.

## 4 LED BY HOLY SPIRIT
## பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட

உங்கள் கண்களுக்கு கவர்ச்சியாக எது இருக்கிறதோ அது மாம்சத்தினால் உண்டானதாகும். ஏவாளுக்கு இப்படிப்பட்ட ஒரு கவர்ச்சிதான் உண்டானது. கவர்ச்சி நம்மை தேவனுடைய உறவை விட்டு பிரித்துவிடும். ஏவாளுடன் சேர்ந்து ஆதாமும் தோட்டத்திற்குள் இருந்து வெளியே தள்ளப்பட்டான். கர்த்தர் சித்தம் என்பது தோட்டம் போன்றது. அதற்குள் தேவனின் பாதுகாப்பும், பண்படுத்துதலும் உண்டு. எனவே, மாம்சத்தின் இச்சைக்கும், கண்களின் கவர்ச்சிக்கும் இடங்கொடாமல் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட ஒப்புக்கொடுங்கள். உங்களுக்கான துணையை ஜெபத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். திருமணத்தை பொறுத்தவரையில் காத்திருந்து கர்த்தரின் சித்தத்தோடு நடப்பது ஏற்புடையதாகும். உங்கள் குடும்ப சூழலினாலும் உறவினர்களின் வற்புறுத்தலினாலும் மாம்சமாய் தீர்மானிக்காமல் தேவனின் குறித்த நேரத்திற்காக காத்திருங்கள். உங்கள் கல்லூரியிலும் அலுவகத்திலும் இப்படிப்பட்ட கவர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் தேவனுடைய நேரத்திற்காக பொறுமையோடு காத்திருங்கள். **ரோமர் 8:14 மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ. அவர்கள் தேவனுடைய புத்திரரா யிருக்கிறார்கள் என்ற வசனத்தின்படி தேவ ஆவி யினாலே நடத்தப்படுவோம்.**



## 5 திருமணத்திற்காக ஆயத்தத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

MAKE YOURSELF READY FOR MARRIAGE

பொதுவாக நாம எல்லாரும் திருமணத்திற்காக காத்து கொண்டு இருப்போம். ஆனால் எத்தனை பேர் ready ah இருக்கோம்னு கேட்டா நெறைய பேரு இல்லனு சொல்லுவாங்க. சிலர் settle ஆகனும் சொல்லுவாங்க. ஆனா அத விட ரொம்ப முக்கியம் நல்ல முடிவை எடுக்கும் பக்குவம் தேவை. சிலர் காரணமே இல்லாம திருமணத்தை தள்ளி போடுவாங்க. ஆனால் அது கடைசில அவங்களுக்கு நன்மையாகவே முடியாது. சிலர் அவங்கள விட இளையவர்களுக்கு திருமணமாகி வாழ்க்கையின் அடுத்த நிலைக்கு போனத பார்த்ததும் இவங்களுக்கு ஒரு விதமான சோர்வு காணப்படும், தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.அதுவே அவங்களும் திருமணத்தை இன்னும் தள்ளி போட வைக்கும். மற்றொன்று நம்ம திருமணத்திற்கு முன்பு இருந்ததை போலவே இருக்க கூடாது. திருமணமான பின் கணவர், கணவரின் கடமைகளையும், மனைவி, மனைவிகளின் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

இப்படியாக நாம திருமணத்திற்காக உண்மையாய் காத்திருக்கும் போது கர்த்தரே காரியங்களை ஏற்ற நேரத்தில் நேர்த்தியாக வாய்க்கப்பண்ணுவார். உங்களுடைய திருமண வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் வெற்றியுள்ளதாக மாற என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!

PAS. JOY
HANNAH ALWIN

# புளிப்பில்லா அப்பப்பண்டிகை



கிறிஸ்துவின் பாடுகளையும், கல்வாரியையும், உயிர்தெழுதலின் வல்லமையையும் தியானிக்கக்கூடிய இந்த மாதத்திலே இஸ்ரவேலர்களின் மற்றொரு முக்கியமான பண்டிகையான புளிப்பில்லா அப்பப் பண்டிகையை எதற்காக கொண்டாடுகிறார்கள் என்பதையும், இந்த பண்டிகைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் தியானிப்போம்.
பஸ்கா பண்டிகையை தொடர்ந்து புளிப்பில்லாத அப்பப் பண்டிகை வருகிறது. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. பஸ்கா பண்டிகை முதலாம் மாதத்தின் 12 ம் நாள் மாலையில் அனுசரிக்கப்படுகிறது. 15 ம் தேதியிலிருந்து 21 ம் தேதி வரையிலும் 7 நாட்கள் இந்த புளிப்பில்லாத அப்பப் பண்டிகை ஆசரிக்கப்படுகிறது.

புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிப்பீர்களாக. இந்த நாளில்தாள் நான் உங்கள் சேனைகளை எகிப்து தேசத்திலிருந்து புப்படப்பண்ணினேன். ஆகையால் உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக இந்த நாளை ஆசரிக்கக்கடவீர்கள். முதலாம் மாதம் 14ம் தேதி சாயங்காலந்தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம் வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள். (யாத்திராகமம் 12:17,18)

பஸ்கா பண்டிகை கொண்டாடின அன்று இராத்திரியிலே தேவன் எகிப்தியரின் தலைப்பிள்ளைகளை சங்கரித்தார். ஆகவே பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, நீங்கள் துரிதமாய் எகிப்தை விட்டு வெளியேறுங்கள் சொல்லி அவர்களைத் துரத்திவிட்டான்.



அன்று இரவிலே, இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து சுக்கோத்துக்கு பிரயாணம் செய்தனர். புறப்பட்டவர்கள் குழந்தைகள் தவிர ஆண்கள் மட்டும் ஆறு இலட்சம் பேர். மேலும் அவர்களோடு ஆட்டுமந்தை, மிருக ஜீவன்கள் முதலான பெருந்தொகையான கால் நடைகளும் புறப்பட்டன. துரிதமாய் கிளம்பினபடியால் அவர்கள் தங்களுகென்று உணவை ஆயத்தப்படுத்தவில்லை. ஆகவே எகிப்திலிருந்து கொண்டு வந்த பிசைந்த புளிக்காத மாவைக்கொண்டு அவர்கள் புளிப்பில்லாத அப்பங்களைச் சுட்டு சாப்பிட்டார்கள்.

புளிப்பு என்பது பாவத்தைக் குறிக்கிறது. பாவம் நிறைந்த எகிப்து என்கிற உலகத்தில் 430 வருடங்கள் இஸ்ரவேலர்கள் அடிமைகளாயிருந்தார்கள். அவர்களை பாவத்திலிருந்து விடுதலையின் வாழ்வுக்கு நேராக அழைத்துவருவதற்கு அடையாளமாக இந்த புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைக் கொண்டாடச் செய்தார்.

*புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவாய்; ஏழாம்நாளிலே கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக. அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும்; புளிப்புள்ள அப்பம் உன்னிடத்திலே காணப்படவேண்டாம்; உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்.*
**யாத்திராகமம் 13:6,7**

புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள், முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்க வேண்டும், முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலரிலிருந்து அறுபுண்டுபோவான். (யாத்திராகமம் 12:15) என்ற கட்டளையைக் கொடுத்து, எப்படி இந்த பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்ற நியமத்தையும் தேவன் அவர்களுக்கு கொடுத்தார்.



## புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் இயேசுகிறிஸ்துவும்

இந்த புளிப்பில்லா அப்பத்தை தயாரிக்கும் முறை சற்று வித்தியாசமானது. அப்பத்தின் மீது கோடுகளையும், துளைகளையும் போட்டு அதை சுடுவார்கள். இதனால் அப்பம் விரைவாக தயாராகி விடும். அதை சுட்டு முடித்தபின் அதன் அமைப்பானது, ஒரு மனித உடலில் சாட்டையால் அடித்ததுபோன்ற காயங்களும் துளைகளும் காணப்படும். ஆம், இது பாவமற்ற இயேசுகிறிஸ்துவின் உடலில் சாட்டையால் கொண்ட தழும்புகளைக் குறிக்கின்றன. அப்பத்தின் துளைகள் இயேசுவின் உடலில் ஆணிகளாலும், ஈட்டியாலும் உருவான காயங்களைக் குறிக்கின்றன. புளிப்பில்லாத திராட்சை ரசம் அவரது இரத்தத்தைக் குறிக்கிறது. ஆகவே என் மாம்சத்தை சாப்பிட்டு, என் இரத்தத்தை பானம் பண்ணுங்கள் என்றார்.



நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாவமில்லாதவர். (1 யோவான் 3:5)

என்று வேதம் சொல்லுகிறது. நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம் என்று சொன்ன இயேசு கிறிஸ்து, அவர் பாவம் என்ற புளிப்பு இல்லாதவராய் இந்த உலகத்தில் வாழ்ந்து வந்தார்.

அப்பம் என்பது கர்த்தருடைய வார்த்தைக்கு அடையாளமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய வார்த்தை என்கிற அப்பத்தை நாம் வாஞ்சையோடு புசிக்க வேண்டும். இந்த கர்த்தருடைய வார்த்தையை தற்போது சிலர் நூதனமாக பேசி, கள்ள உபதேசங்களைப் போதிக்கிறார்கள். ஆகவே இயேசு, பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (மத்தேயு 16:6) என்று கூறுகிறார். காரணம், அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை



புரட்டுகிறவர்களாயிருந்தார்கள். யோவான் 7:17ல் என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது என்றார். அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்வான். புளிப்பில்லாத அப்பப்பண்டிகை, பாவமில்லாத தேவக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது. பாவமற்ற பூரணமான பலியானவர், பாவத்தினால் வரும் சகல ஆதிக்கங்களையும் நாம் புறம்பே தள்ளி, தவறான உபதேசங்களுக்கு விலகி, புளிப்பில்லாத வசனங்களை நாம் தியானிக்கும்போது, புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை கொண்டாடுகிறவர்களாயிருக்கிறோம்.

மேலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, 1 கொரிந்தியர் 5:6-8ம் வசனத்தில் நம் வாழ்க்கையில் புளிப்பில்லா அப்பம் உடையவர்களாயிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல, கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால் நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.



புளிப்புள்ள அப்பம், எகிப்தின் பாவமுள்ள அடிமை வாழ்வின் அடையாளம். புளிப்பில்லாத அப்பம் இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் பாவமற்ற விடுதலையின் அடையாளம்.

**இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்ட நாம் புதிய பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வோமாக!**

# NAVAPUR PRAYER FESTIVAL



## மஹாராஷ்டிரா மாநிலம் நவப்பூரில் வெளிப்பட்ட தேவ மகிமை

6வது தேசிய ஜெப ஒருங்கிணைப்பு கூட்டமானது மஹராஷ்டிரா மாநிலத்தின் நவப்பூர் என்ற பட்டணத்தில் ஜனவரி 26,27,28 ஆகிய தினங்களில் திறந்தவெளி படைமுயற்சி கூட்டமாக நடைபெற்றது. இப்பெருவிழாவின் மூன்று நாட்களும் போதகர். **ஆல்வின் தாமஸ்** அவர்கள் ஹிந்தி மொழியில் பாடல் களைப் பாடி ஆராதனை ஏறெடுத்து தேவ பிரசன்னத்தில் ஜனங்களை நடத்தினார். வாலிபர்களும் சிறுவர்களும் மேடைக்கு முன்பாக வந்து, கர்த்தரை விடுதலையோடு ஆராதித்தனர். ஆராதித்துக் கொண்டிருக்கும்போதே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் தெய்வீகத் தொடுதலையும் பெற்றனர். அநேகர் அற்புத சுகத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொண்டார்கள்.

முதல் இரண்டு நாட்கள் கூட்டத்தில் நடைபெற்ற அற்புதங்களைக் கேள்விப்பட்டு மூன்றாவது நாளில் நவப்பூர் பட்டணத்தை சுற்றியுள்ள பல கிராமங்களிலிருந்து அலைகடலென திரண்டு வந்த ஜனங்களால் மைதானம் முழுவதும் நிரம்பியது. கூட்டத்தின் முடிவில் ஒவ்வொருவருக்காகவும் எண்ணெய் பூசி பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டது. மூன்று நாட்கள் எழுப்புதல் பெருவிழாவின் நிமித்தம் நவப்பூரில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று!
















### பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை



மூன்று வருடங்களாக நான் பிசாசின் போராட்டத்தினால் நான் அலைக் கழிக்கப்பட்டேன். யார் எனக்கு விடுதலை தருவார் என்ற கலக்கத்தோடு இருந்தபோது. இக்கூட்டத்தில் கர்த்தர் பூரணமாக என்னை சுகமாக்கி பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பினார்.

### முதுகுவலியை சுகமாக்கினார்



கடந்த 2 வருடங்களாக முதுகுவலியினால் நான் அதிகமாக கஷ்டப்பட்டேன். மிகுந்த வலியோடு கூட இந்த கூட்டத்திற்கு வந்தபோது, தேவன் என்னை சுகமாக்கினார். இப்பொழுது அந்த வலியே இல்லை.

### பலவீனத்திலிருந்து விடுதலை



எனக்கு இரவில் கெட்ட கனவுகள் வந்து கொண்டே இருந்தது. அதினிமித்தம் நான் மிகவும் பலவீனமானேன். ஆனால் போதகர் என்னை மேடையில் அழைத்து எனக்காக ஜெபித்தார். நான் புதுப்பெலனால் நிரப்பப்பட்டேன். கர்த்தர் எனக்கு விடுதலைக்கொடுத்தார்.

### தற்கொலை எண்ணத்திலிருந்து விடுதலை

நான் அநேக நாட்களாக தற்கொலை எண்ணத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டேன். இரவில் தூக்கம் வருவதே இல் லை. மிகவும் கஷ்டப்பட்டேன். மூன்றாவது நாள் கூட்டத்தில் போதகர், தீர்க்கதரிசனமாக தற்கொலை எண்ணத்தால் பாதிக்கப்பட்டவர்களை கர்த்தர் விடுதலையாக்குகிறார் என்று சொன்னபோது, நான் முன்பாக சென்று ஜெபித்தேன். கர்த்தர் என்னை தம்முடைய ஆவியினால் நிரப்பி விடுதலையாக்கினார். கர்த்தருக்கே மகிமை!

TESTIMONY



# எழுப்புதலுக்காய் 24/7 ஜெப மையத்தை எழுந்து கட்டுவோம் வாருங்கள்



தேவனுடைய பிள்ளைகளே, இது கடைசி காலம்! எழுப்புதலின் நேரம்!! ஆண்டவர் சபைகளையெல்லாம் மாபெரும் எழுப்புதலின் அறுவடைக்கு ஆயத்தமாகிக்கொண்டு வருகிறார். ப்ரீடம் பெருவிழாக்கள் மூலமாக ஏராளமான வாலிபர்களை ஆண்டவருடைய ஊழியத்தை செய்வதற்காக எழுப்புவது, போதகர்கள் மிஷனெரிகளை யோசுவாவின் சேனை என்ற கருத்தரங்கு மூலமாக உருவாக்குவது, அற்புத பெருவிழாக்கள், பத்திரிக்கை ஊழியம், தொலைக்காட்சி ஊழியம், எக்காள பண்டிகை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் பட்டணத்திற்கும் சென்று, ஜனங்களுக்காக திறப்பில் நின்று, தேவனுடைய ராஜ்யம் வருவதாக என்று பிரகடனப்படுத்தி ஜெபித்திருக்கிறோம். இப்பொழுதும் ரூஹா ஊழியத்தின் மூலமாக தேவன் செய்யப்போகிற காரியங்களுக்கு கீழ்படிந்து எழுப்புதல் மையத்தைக் கட்டும்படி ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

24 மணி நேரமும் துதித்து, ஜெபித்து, திறப்பிலே நின்று, "ஆண்டவரே! எங்கள் தேசத்தை சந்தியும்" என்று எலியாவைப் போல முழக்கமிட ஒரு கர்மேல் பர்வதம் நமக்குத் தேவை. அக்கினி மயமான நாவுகள் இறங்கி வந்த மேல்வீட்டறை தேவை. நாம் வாங்கப்போகிற ரூஹா எழுப்புதல் மையமானது, பல தேசங்களிலிருந்து வருகிற இளம் வாலிபர்களை வார்த்தையிலும் மீடியாவிலும் ஆராதனையிலும் கூர்மையான ஆயுதங்களாக உருவாக்கும் ஒரு எழுப்புதல் பட்டறையாக இருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணும்படியாக தேவன் நமக்கு ஒரு இடத்தைக் காண்பித்திருக்கிறார். 16 ஆண்டுகளுக்கு பிறகு தாவீதின் நகரமாக, சீயோன் கோட்டையாக தேவன் தரப்போகிறார். எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று நெகேமியா அறைகூவல் விடுத்தபோது, ஜனங்கள் எழும்பி வந்து அலங்கத்தைக் கட்டினது போல, நீங்களும் எங்களோடு கூட இணைந்து கடைசி எழுப்புதலுக்காக, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்ட எங்களோடு இணையும்படி அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுக்காக வைராக்கியமாய் நிற்கும்போது, தேவன் உங்களையும் உங்கள் வீட்டையும் கட்டுவார். பரலோகத்தின் தேவனானவர் உங்களுக்கு காரியத்தைக் கைக்கூடி வரப்பண்ணுவார். ஆகவே வாருங்கள் எழுந்து கட்டுவோம். உங்கள் மனதிலே ஆண்டவர் இந்த எழுப்புதல் மையத்திற்காக என்ன விதைக்கச் சொல்லுகிறாரோ அதை விதையுங்கள். தேவனுடைய ராஜ்யத்திற்க்கென்று உற்சாகமாய் விதையுங்கள்.

ஒரு சதுர அடியின் விலை ரூபாய் 2500 என்று கணக்கிடப்பட்டுள்ளது. நீங்கள் குடும்பமாகவோ, சபையாகவோ அல்லது ஜெபக்குழுவாகவோ சேர்ந்து எழுப்புதலுக்காக விதைக்கலாம்.

எழுப்புதலுக்காக எனது பங்கு

- ☐ ஒரு சதுர அடி ரூ.2500
- ☐ 4 சதுர அடி ரூ 10000
- ☐ 10 சதுர அடி ரூ 25000
- ☐ எனது பங்கு ரூ____________

பொருத்தனையோடு விதையுங்கள். ஆண்டவருடைய ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று தாவீது விரும்பினபோது, தேவன் தாவீது ஒரு நிலையான வீட்டைக் கட்டினார். அவனுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தினார். அதுபோல எழுப்புதலுக்காக வைராக்கியம் பாராட்டி, பொருத்தனை செய்து விதைக்கிற உங்களையும் கர்த்தர் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

உங்களுடைய உதாரத்துவமான காணிக்கைளை Cheque / DD/ Money Order மூலமாக அனுப்ப விரும்பினால் Ruah Ministries Buliding Fund என்ற பெயரில் அனுப்பலாம். அல்லது கீழே உள்ள QR Code ஐ பயன்படுத்தி Googlepay / Phonepe மூலமாக அனுப்பலாம். உங்கள் விதைகளை நீங்கள் அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகவோ அல்லது தொலைப்பேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு கட்டாயம் தெரிவிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**1 Account Details** வங்கிக்கணக்கு

| | | |
|---|---|---|
| ACC. NAME | RUAH MINISTRIES | RUAH MINISTRIES BUILDING FUND |
| ACC. NUMBER | 05741450000037 | 50200033712782 |
| BANK NAME | HDFC Bank | HDFC BANK |
| BRANCH NAME | Kodambakam | Kodambakkam |
| IFSC CODE | HDFC0000574 | HDFC0000574 |

**2** Google Pay / Phone Pe

**9444150777**

**3 Cheque Favour Name:**

- Ruah Ministies
- Ruah Ministries Building Fund

*Scan here to Donate*

**4 E.M.O** மணி ஆர்டர்

To Address: Ps. Alwin Thomas
82, Jawaharlal Nehru Salai,
Vadapalani, Chennai - 26, 9884710777

நீங்கள் பணம் செலுத்தியபின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் எந்த ஊழியத்திற்காக நீங்கள் காணிக்கை அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விவரங்களை **9884901777** என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

Owned and Published by E.Alwin Thomas No.5, 18th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Printed by T. Simon Peter Vasanth Prints & Packs, No.44, Paarthasaarathi pettai Street, Vellala Teynampet, Chennai - 600 086. Editor E. Alwin Thomas

Registered Newspaper RNI No. TNTAM/2010/36309 | Postel Regd.No. TN/CC(S)DN/411/23-25
Licensed to Post WPP No.TN/PMG(CCR)WPP-585 / 2023-2025 Published on 1st week of Every Month
Posted between 25-31 Feb 2024 | Posted at RMS Egmore Patrica Channel




*If Undelivered please Return to:*

**RUAH SUVASA KATRU**
No. 82, 100 Feet Road,
Vadapalani, Chennai,
Tamil Nadu 600026

To